## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 1-2 - வீடுமின்[1]
### ('பகவத் பக்தியைப் பண்ணி ஆச்ரயியுங்கோள்' என்று பிறர்க்கு உபதேசித்தல்)

2686 * வீடுமின் முற்றவும் * வீடு செய்து ** உம்முயிர்
வீடுடையானிடை * வீடு செய்ம்மினே[2] 1

2687 மின்னின் நிலையில * மன்னுயிர் ஆக்கைகள் **
என்னும் இடத்து * இறை உன்னுமின் நீரே 2

2688 நீர் நுமது என்றிவை * வேர் முதல் மாய்த்து ** இறை
சேர்மின் உயிர்க்கு * அதன் நேர் நிறை இல்லே 3

2689 இல்லதும் உள்ளதும் * அல்லது அவன் உரு **
எல்லையில் அந்நலம் * புல்கு பற்றற்றே 4

2690 அற்றது பற்றெனில் * உற்றது வீடுயிர் **
செற்றது மன்னுறில் * அற்றிறை பற்றே 5

2691 பற்றிலன் ஈசனும் * முற்றவும் நின்றனன் **
பற்றிலையாய் * அவன் முற்றில் அடங்கே 6

2692 அடங்கெழில் சம்பத்து * அடங்கக் கண்டு ** ஈசன்
அடங்கெழில் அஃதென்று * அடங்குக உள்ளே 7

2693 உள்ளம் உரை செயல் * உள்ள இம்மூன்றையும் **
உள்ளிக் கெடுத்து * இறை உள்ளில் ஒடுங்கே 8

2694 ஒடுங்க அவண் கண் * ஒடுங்கலும் எல்லாம் **
விடும் பின்னும் ஆக்கை * விடும் பொழுது எண்ணே 9

2695 * எண்பெருக்கு அந்நலத்து * ஒண் பொருள் ஈறில **
வண் புகழ் நாரணன் * திண் கழல் சேரே 10

2696 * சேர்த்தடத் * தென் குருகூர்ச் சடகோபன் சொல் **
சீர்த் தொடை ஆயிரத்து * ஓர்த்த இப்பத்தே 11

**அடிவரவு:** வீடு மின் நீர் இலது அற்ற பற்று அடங்கு உள்ளம் ஒடுங்க எண் சேர் பத்து

---

[1] இது கோவில் திருவாய்மொழி
[2] இசைமினே